பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 20 | புதன்கிழமை | 06.11.2024 | அதிர்வு 96

## தமிழ் மக்களை ஏமாற்றும் அநுர



சுரேஷ் குற்றச்சாட்டு

(விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்)

# என் பெயரைத் தவிர்த்து முடிந்தால் பிரசாரம் செய்யுங்கள் பார்க்கலாம்

## கஜேந்திரகுமார் தலைமையிலான கட்சியினருக்கு தமிழரசின் பேச்சாளர் சுமந்திரன் பகிரங்க சவால்




(எஸ்.நிதர்ஷன்)

"தேர்தல் பிரசார மேடைகளில் எம்.ஏ.சுமந்திரனின் பெயரைத் தவிர்த்து முடிந்தால் உங்களது தேர்தல் பரப்புரைகளைச் செய்யுங்கள் பார்க்கலாம்."

- இவ்வாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்குச் சவால் விடுத்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளருமான எம்.ஏ.சுமந்திரன்.

05

# சசிகலா ரவிராஜ் பயணித்த கார் மீது கல்வீச்சுத் தாக்குதல்

## சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் பயணித்த கார் மீது இனந்தெரியாத நபர்கள் கல் வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

சசிகலா ரவிராஜ், யாழ். சாவகச்சேரியில் தனது வீட்டில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை மாலை பிரசாரப் பணிகளுக்காகக் காரில் பயணித்தபோது கார் மீது கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது .

காரில் சசிகலா ரவிராஜ் இருந்த போதிலும் காயங்கள் எதுவும் இன்றி தப்பியுள்ளார்.

05






முன்னைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கிடைத்த தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதி தற்போது கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கு கிட்டவில்லை. நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக அது வழங்கப்படவில்லை. இனிவரும் நாடாளுமன்றத்திலும் புதிய உறுப்பினர்களுக்கு தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதி கிடைக்காது என்றே தெரிகிறது.

இதே சமயம் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பிடித்தமில்லாத பல புதிய கட்டுப்பாடுகள் வர இருக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தங்களுடைய விசேட ஆளணிக்கு ஆள்களை நியமிக்க அனுமதியும், அதற்கான வேதனமும் உண்டு. வழமையாக தங்களுடைய மனைவி, பிள்ளைகள், உறவினர்களை இந்த ஆளணிக்குத் தாங்கள் நியமித்துள்ளார்கள் எனக் காட்டி அவர்கள் மூலம் அந்த வேதனத்தை சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரே சுவாஹா

05

# திருச்செந்தூரில் ஆறு திருமுருகனின் கந்தசஷ்டி கால தொடர் சொற்பொழிவு



செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு திருமுருகன் "தமிழ்க் கடவு கந்தன் மகிமைக" குறித்து இந்தியாவின் திருச்செந்தூர் அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கந்த சஷ்டி திருவிழாவில் தொடர்ச்சியாக ஏழாவது ஆண்டாக சொற்பொழிவாற்றி வருகின்றார்.

அவரின் 2024ஆம் ஆண்டு கந்தசஷ்டி சொற்பொழிவு களை துமியின் Facebook மற்றும் YouTube தளங்களில் பார்க்கலாம் என்பது குறிப்பிடத் தக்கது.






# முன்னைய ஆட்சியாளர்களைப் போல் தமிழ் மக்களை ஏமாற்றும் அநுர அரசு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கடும் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

"தமிழர்கள் விடயத்தில் அநுர அரசும் முன்னைய ஆட்சியாளர்களைப் போலவே ஏமாற்று வித்தைகளைக் காட்டத் தொடங்கியுள்ளது. இதனால் அநுர அரசு மீதான நம்பிக்கை அல்லது எதிர்பார்ப்பு குறைவடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது."

– இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மக்களின் பல்வேறுபட்ட எதிர்பார்ப்புக்கு மத்தியில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி அநுரகுமார ஜனாதிபதியாக வந்திருக்கின்ற நிலையில் உண்மையாகவே ஜனாதிபதி மீதான எதிர்பார்ப்பு எந்தளவில் உள்ளது என்பது தற்போது கேள்விக்குறியாக உள்ளது.

குறிப்பாக ஜனாதிபதி மீதான நம்பிக்கை அல்லது எதிர்பார்ப்பு என்பன குறைந்து வருகின்றது என்பதுதான் உண்மை. இதனால் பெரும் நம்பிக்கையின் அடிப்படையில் மாற்றத்தை விரும்பி வாக்களித்த மக்களுக்கு இப்போது ஏமாற்றமே கிடைக்கின்றது.

இவ்வாறான நிலைமையில் அரச கட்சியைப் பொறுத்த வரையில் தாங்கள்தான் தமிழ் மக்களுக்கு ஏதோ செய்வதாகக் காட்டுவதற்கு முயற்சிக்கின்றனர். அதனை எமது மக்கள் தெளிவாக முதலில் விளங்கிக்கொண்டு சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

குறிப்பாக அநுரவின் அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தமிழ் மக்களுக்காகப் பலதைச் செய்வதாகச் சொல்லி இருந்தது. ஆனால், அவ்வாறு கூறிய எதனையும் அநுர தரப்பு இதுவரையில் செய்யவில்லை.

அதிலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்று ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சொன்னவர்கள் இப்போது நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற தொனியில் இப்போது பேச ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் மக்களுக்குத் தாங்கள் செய்வதாகக் கூறிய எந்த விடயத்தையும் செய்யாமல் இருப்பது மாத்திரமல்லாது மாறாக இதற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

அதில் மாகாண சபைத் தேர்தலை இப்போது நடத்தப் போவதில்லை, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படாது, காணிகள் விடுவிப்பில் திட்டவட்டமான முடிவில்லை. ஆனாலும், வீதிகளைத்தான் திறப்பதில் கவனம், ஊழலுக்கு எதிரானவர்கள் என்று சொல்லி கொண்டு மிக மிக ஊழல் பேர்வழிகளையே நியமனம் செய்கின்றார்கள்.

இந்த ஆட்சியாளர்கள் உண்மையாகவே ஊழலுக்கு எதிராக இருக்கின்றார்களா? சமத்துவம்? தமிழ் – சிங்கள – முஸ்லிம் என பாகுபாடு இல்லாமல் இருக்கின்றார்களா? என்றால் அவர்களது அனைத்து நடவடிக்கைகளும் அதற்கு எதிராகத்தான் இருக்கின்றது.

இவ்வாறான சூழலில் தமிழ் மக்கள் பலமான கூட்டணியொன்றை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும். அதுவும் தமிழர் தரப்பு ஒன்றாக ஐக்கியப்பட்டுப் போவதன் ஊடாகத்தான் தமிழ் மக்களின் குரலாக ஓங்கி ஒலிக்க முடியும் என்பதில் தெளிவாக இருக்கின்றோம்.

தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். நாங்கள் எப்போதும் ஐக்கியப்பட்டு செயற்படவே விரும்புகின்றோம். இதற்கான அழைப்புக்களை கூட பல தடவைகள் தமிழரசுக் கட்சிக்கு விடுத்திருக்கிறோம்.

தமிழரசின் உள்வீட்டுக்குள்ளே ஏற்பட்ட குழப்பங்களால் அவர்கள் நீதிமன்றம் வரை சென்று அதிலிருந்து பிரிந்து சுயேச்சையாகக் கேட்கும் அளசுக்குக் கூட வந்திருக்கின்றார்கள். ஆகவே, இவ்வாறான குழப்பங்களைத் தமது கட்சிக்குள்ளேயே இவர்கள் முதலில் திருத்திக்கொள்ள வேண்டும்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த பலமான – வலுவான சக்தி நாடாளுமன்றம் செல்ல வேண்டியது அவசியம். அதற்கமைய மக்கள் தமது முழுமையான ஆதரவை எமக்கு வழங்க வேண்டும்." – என்றார்.

# முன்னாள் அமைச்சர்கள் - எம்.பிக்கள் வன்னியில் மக்களால் விரட்டியடிப்பாம்

## மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று சொல்கின்றார் உதயராசா



(கி.வசந்தன்)

"வன்னியில் பல பகுதிகளில் முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் இராஜாங்க அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்கள் விரட்டியடிப்பதை நாம் காண்கின்றோம். மக்கள் மத்தியில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது."

– இவ்வாறு ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் ப.உதயராசா தெரிவித்தார்.

வவுனியா, ஓமந்தையில் தொழிலதிபர் நெல்சன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யுத்தம் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்தும் வன்னி மக்கள் இன்றும் மீளத் தம்மைக் கட்டியெழுப்ப முடியாத நிலையிலும், தமது அடிப்படைத் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலும் உள்ளனர். இதற்கு கடந்த 15 வருடங்களாக அரசில் அமைச்சராகவும், இராஜாங்க அமைச்சராகவும் இருந்தவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களுமே காரணம்.

பல தடவைகள் மக்களது வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் தெரிவாகி நாடாளுமன்றக் கதிரைகளைச் சூடாக்கிவிட்டு தமது பைகளை நிறைத்த அரசியல்வாதிகளே உள்ளனர். அவர்கள் மக்களது அடிப்படைத் தேவைகளைக் கூட முழுமையாகப் பூர்த்தி செய்யத் தவறியுள்ளதுடன், தமக்குள் ஆசனத்தைப் பெறுவதற்காகச் சண்டை போட்டு இன்று பல துருவங்களாக பிரிந்து மக்கள் முன்வருகின்றனர்.

பல பகுதிகளில் இவ்வாறான முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் இராஜாங்க அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்கள் விரட்டியடிப்பதை நாம் காண்கின்றோம். மக்கள் மத்தியில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. இனியும் போலித் தேசியம் பேசி மக்களை ஏமாற்றி வாக்குகளைச் சுரண்ட முடியாது.

மக்கள் தமக்கான தலைவர்களை இனங்கண்டு வருகின்றனர். தபால் பெட்டியின் பின் தினமும் திரளும் மக்கள் கூட்டம் அதனை வெளிப்படுத்துகின்றது. அந்த மக்களின் நம்பிக்கைகளை நாம் வீண்போகச் செய்ய மாட்டோம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெறும் சொற்ப வாக்குகளால் எமது பிரதிநிதித்துவம் இல்லாமல் போனது. ஆனால், இம்முழற அதைத் தாண்டி நாம் இரண்டு ஆசனங்களைப் பெறக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் எம்முடன் கைகோர்த்து வருகின்றனர். அதற்கேற்ப மக்களின் அபிவிருத்திக்காக எமது குரல் நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலிக்கும். அதற்கு மக்களின் ஆணை எமக்குப் பலமாகக் கிடைக்க வேண்டும்." – என்றார்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் சடலம்: அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை!






யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவரின் சடலத்தைப் பொறுப்பேற்குமாறு வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட தர்மலிங்கம் வசந்தராஜன் (வயது 60) என்பவர் சிகிச்சை உயிரிழந்துள்ளார்.

இதுவரை அவரது சடலத்தை யாரும் அடையாளம் காட்டிப் பொறுப்பேற்காததால் சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உறவினர்கள் எதிர்வரும் 14 நாட்களுக்குள் சடலத்தை அடையாளம் காட்டி பொறுப்பேற்குமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் கோரியுள்ளார்.




## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்து விடுவார். ஆனால் இனிமேல் அத்தகைய விசேட ஆளணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய நெருங்கிய உறவினர்களை நியமிக்க முடியாது என்ற புதிய கட்டுப்பாடு தற்போதைய புதிய அரசினால் கொண்டுவரப்படுவதாக தெரிகிறது. பிரதமர் ஹரிணி இதனைப் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

ஆக, நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாதாந்த வருமானத்தில் வெட்டு விழுகிறது என்பது தெளிவு.

+ + +

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் தமது பிரசாரத்துக்கான வரவு – செலவுக் கணக்கு விவரங்களைச் சமர்ப்பிக்காத 3 வேட்பாளர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட இருப்பதாக ஆரவாரமாக அறிவிக்கப்பட்டது. போட்டியிட்ட வேட்பாளர்களில் 35 பேர் உரிய காலத்தில் வரவு – செலவுக் கணக்கு விவரங்களைச் சமர்ப்பித்து விட்டனர் என்றும் கூறப்பட்டது. ஒருநாள் பிந்தி கணக்கு வழக்குகளைச் சமர்ப்பித்த தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூடக் கூறப்பட்டது

ஆனால் வரவு – செலவு விவரத்தை நேரத்துடன் – உரிய காலத்தில் – சமர்ப்பித்த 35 வேட்பாளர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் கணக்கு – வழக்குகள் தொடர்பாக தேர்தல் ஆணையம் விதித்த விதிமுறைகளுக்கு அமைவான விதத்தில் – முறையில் – அவற்றைச் சமர்ப்பிக்கவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகிறது. அதுவும் முன்னணியில் திகழ்ந்த வேட்பாளர்களில் ஒருவரின் கணக்கு வழக்கும் கூட அவ்வாறு தேர்தல் திணைக்கள ஒழுங்கு முறைக்கு அமைய சமர்ப்பிக்கப்படவில்லை என்பது இப்போது தெரிய வந்திருக்கின்றது.

ஆக, இந்த விடயத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பதாயின் அது வெறுமனே அரியநேத்திரன் உட்பட மூன்று பேருடன் அடங்காது, சுமார் 20 பேர் வரை இந்த விடயத்தில் சட்டத்துக்குள் சிக்குவர் என்று இப்போது சுட்டிக் காட்டப்படுகிறது.

## சசிகலா ரவிராஜ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, கடந்த சில தினங்களுக்கு முன்னர் சசிகலா ரவிராஜ்ஜின் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளும் கல் வீசி உடைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று அவர் பயணித்த கார் மீது கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## என் பெயரைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இந்தச் சவாலை விடுத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து முதலில் வெளியேறியவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தான்.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், தமிழ் மக்களைக் கொன்றழித்த சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் எடுத்தபோது மேடையில் ஒன்றாக இருந்தவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலின்போது ஆசனப் பங்கீட்டால் ஏற்பட்ட முரண்பாட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு அவர் வெளியேறினார்.

ஆசனம் கிடைக்காததால் சைக்கிள் எடுத்து ஓடிவிட்டு இன்று வரை நாட்டில் நடப்பது எல்லாவற்றுக்கும் தமிழரசுக் கட்சிதான் காரணம் என்று வெற்று அரசியல் நாடகம் போட்டு வருகின்றனர் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்.

உங்கள் கட்சியிள் இருக்கும் ஓட்டைகளைப் பார்க்க ஆளில்லை. நீங்கள் தமிழரசுக் கட்சி உடைந்து விட்டதாகக் கண்ணீர் வடிக்கின்றீர்கள்.

கடந்த முறை உங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த மணிவண்ணனுக்கு நீங்கள் என்ன செய்தீர்கள்? இந்த முறையும் நீங்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்து வாக்குக் கேட்பது எங்கள் கண்ணுக்குத் தெரியாமல் இல்லை.

நீங்கள் உங்களைப் பார்த்துக்கொள்ளுங்கள். மக்கள் உங்களுக்குக் கொடுத்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்ற பணியைச் செய்தீர்களா என்பதற்கு மக்களுக்குப் பதில் சொல்லுங்கள். தொடர்ந்து தமிழரசுக் கட்சியை விமர்சிப்பதை அரசியல் மூலதனமாக்குவது பலிக்காது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

இணைந்த வடக்கு – கிழக்குத் தேசமென முழங்கும் நீங்கள் கடந்த தடவை கிடைத்த போனஸ் ஆசனத்தைக் கிழக்குக் கொடுத்தீர்களா? நீங்கள் அதைத் தேர்தலில் தோற்ற உங்கள் கஜேந்திரனுக்குக் கொடுத்து விட்டு வடக்கு – கிழக்கு இணைப்பு எனப் படம் போடுகிறீர்கள்.

கிழக்கில் அவ்வளவு கரிசனையென்றால் நீங்கள் கிழக்குக்கு அந்த நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கொடுத்திருப்பீர்கள்.

உங்களுக்குக் கிழக்கில் கரிசனையில்லை. வாயளவில், தேர்தல்காலங்களில் ‘வவுனியாவில் நிலம் பறிபோகின்றது, மட்டக்களப்பில் நிலம் பறிபோகின்றது’ என்கிறீர்கள்.

குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலை, கிண்ணியா என்று ஒரு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சட்டத்தரணி கதை அளக்கின்றார்.

மக்களது வெகுஜனப் போராட்டங்களோடு, அத்தனை நிலங்களையும் வழக்கு வைத்துப் பாதுகாப்பது நாங்கள். வகுப்பெடுத்தவர் ஒரு சட்டத்தரணி. அவரை நான் இவை தொடர்பில் ஒரு நீதிமன்றப் பக்கமும் கண்டதில்லை. வழக்காடி வெல்வது நாங்கள். போராடுவது மக்கள். படமெடுத்து பேஸ்புக்கில் போடுவது நீங்கள்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை அடுத்து தேசிய அரசு அமைந்தால் அரசுக்கு ஆதரவளிப்போம். ஆனால், நல்லாட்சி போன்று எதிர்க்கட்சி வரிசையிலேயே அமர்வோம்.

சார்ள்ஸ் நிர்மலநாதன் பார் பெர்மிட்டுக்குக் கடிதம் கொடுத்தது உண்மையே. அந்த கடிதத்தை ஒழித்து வைத்துவிட்டு இப்போது முடிந்தால் காட்டுங்கள் பார்ப்போம் என்று அவர் சவால் விடுகின்றார். அத்தோடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்துள்ளார். அவரால் ஒன்றும் செய்ய முடியாது. பார் பெர்மிட் விவகாரத்தாலேயே அவர் தேர்தலில் இருந்துதானாக வெளியேறினார். விக்னேஸ்வரனும் போட்டியிடாது வெளியேறினார்.

அதேபோல் வேறு சிலரும் உள்ளே இருக்கின்றார்கள். அவர்களும் தாமாக வெளியேறினால் நல்லது.” – என்றார்.



# அநுரவின் ஆட்சி 5 ஆண்டுகளுக்கு தொடர வேண்டும்

**அதன்பின்னர் தாம் மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறுவோம் என மொட்டுவின் தேசிய அமைப்பாளர் நாமல் கூறுகின்றார்**

“ஜனாதிபதிஅநுரகுமாரதிஸாநாயக்க தலைமையிலான இந்த அரசு இன்னும் ஐந்து வருடங்களுக்குத் தொடர வேண்டும்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவ்வாறு அல்லாவிட்டால் நாடு சவால்களை சந்திக்க நேரிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலை விடவும் மொட்டுக் கட்சிக்குரிய வாக்கு வங்கி தற்போது அதிகரித்துள்ளது எனவும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி நிச்சயம் மீண்டெழும் எனவும், கட்சியை மறுசீரமைப்பதற்குரிய நடவடிக்கை இடம்பெறும் எனவும் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

அடுத்த ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் ஆட்சியை மீண்டும் பிடிப்பதே எமது இலக்காகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# அரச சேவையில் மாற்றம் வேண்டும்

## இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்துடனான சந்திப்பில் ஜனாதிபதி அநுரகுமார வலியுறுத்து

அடுத்த ஐந்து வருடங்களில் கிராமிய மக்களின் வறுமையை இல்லாதொழித்து கிராமிய மக்களின் பொருளாதாரம் மற்றும் சமூக அந்தஸ்தை உயர்த்துவது அரசின் பிரதான நோக்கமாகும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்துடன் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

அரசின் அந்த வேலைத்திட்டம் வெற்றியடைவதற்கு அரச அதிகாரிகளின் ஆதரவு மிகவும் அவசியமானது எனத் தெரிவித்த ஜனாதிபதி, அரச அதிகாரிகளின் அனுபவமானது அதற்குப் பெரும் உறுதுணையாக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அரசின் நோக்கத்திற்கும் அரச சேவைகள் செயற்படும் விதத்திற்கும் இடையில் சில இடைவெளி காணப்படுகின்றது எனவும், நாட்டை அபிவிருத்தி செய்யும் அரசின் வேலைத் திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு இதுவரையில் அரச நிர்வாகம் செயற்பட்டு வந்த விதத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டில் மோசடி மற்றும் ஊழலை நிறுத்துவது அரசின் முக்கிய பணி எனவும், மோசடி மற்றும் ஊழல் காரணமாக நாட்டின் திட்டங்களை நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், அரச சேவையில் அரசியல் ரீதியிலான தலையீடுகள் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும், அரச உத்தியோகத்தர்களுக்கு சுதந்திரமாகச் செயற்படுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாட்டின் பிரதேச அபிவிருத்திக்காக அரச அதிகாரிகளுக்கு விசேட பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த ஜனாதிபதி, மக்கள் சேவைகளைக் குறைக்காமல் அரச சேவையில் மேற்கொள்ளப்படும் தேவையற்ற செலவுகளைக் குறைக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்தின் தலைவர் மகேஷ் கம்மன்பில, செயலாளர் ஜயவீர பெர்னாண்டோ உள்ளிட்ட குழு உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.





# சாவகச்சேரியில் பிரசாரத்தில் ஈடுபட்ட தமிழ் மக்கள் கூட்டணி



தமிழ் மக்கள் கூட்டணியினர் சாவகச்சேரி தேர்தல் தொகுதியில் தமது பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் மான் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தலைமையில் சக வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் ஆகியோர் நேற்று செவ்வாய்க்கிழமை பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டனர்.







## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024

“ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்.”

- கரோலஸ், லினேயஸ்

(தாவர வகைப்பாட்டியலாளர்)



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கூட்டரசு சாத்தியமா?

இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் முன்னர் எந்த மாகாண சபையையோ அல்லது மாநகர சபையையோ, நகர சபையையோ நிர்வகித்து அறிந்திராத ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தியின் கைகளில் நேரடியாக நாட்டின் அரசு நிர்வாகம் வந்திருக்கிறது.

முன்னர் ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக் குழுத் தேர்தலைக் கூட எதிர்கொள்ளாத கோட்டாபய ராஜபக்ஷ, நேரடியாக ஜனாதிபதித் தேர்தலைச் சந்தித்து, பெரு வெற்றியீட்டி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியானார். அரசியல் அனுபவம் இல்லாத அவர் ஆட்சியை எப்படிப் போட்டு அடித்தார் என்பது எல்லோருக்கும் தெரிந்த பரகசியம். இலங்கைச் சரித்திரத்தில் அதி உச்ச வாக்கு எடுத்த ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்த அவரை, இரண்டரை வருடங்களுக்குள் மக்களே நாட்டை விட்டு ஓட ஓட விரட்டி அடிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அவரைப் போலவே, ஆட்சி அதிகாரத்தில் அனுபவம் இல்லாத தேசிய மக்கள் சக்தி இப்போது நாட்டின் அதிகாரத்தை கையில் எடுத்திருக்கின்றது. ஆயினும் அத்தரப்புக்கு அரசியல் புதிதல்ல. அது, ஆயுத தாங்கிய போராட்டத்தையும், அதிலிருந்து தன்னை மாற்றிக் கொண்டு ஜனநாயக வழி அரசியலிலும் பல தசாப்த காலங்கள் கடந்து ஈடுபட்ட அனுபவம்கொண்டிருப்பதால் ஆட்சி அதிகாரத்தை ஓரளவேனும் நேர்சீராகக் கொண்டு நடத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆட்சியை அமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளர்களான ஜே.வி.பி. அமைப்பினுடைய பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, தாங்கள் இந்தத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று, உறுதியான அரசை அமைப்போம் என மிகுந்த நம்பிக்கையோடு கூறுகிறார்.

அரசியல்வாதிகள் அப்படித் தேர்தல்களை ஒட்டி நம்பிக்கை வெளியிடுவது தப்பில்லை. ஆனால் தாங்கள் அறுதிப் பெரும்பான்மை பெற்று அரசை அமைப்பதால் வேறு எந்த தரப்போடும்கூட்டணி அரசு அமைக்கவே மாட்டோம் என்றுஅவர் உறுதிப்பட குறிப்பிடுகின்றார். இந்தத் தேர்தலின் பின்னர் கூட்டணி அரசு அமைப்பதற்கோ, தேசிய அரசு அமைப்பதற்கோ இடமில்லை என்று அவர் திட்டவட்டமாக கூறுகிறார்.

அங்குதான் சிக்கல் உள்ளது.

அவர் எதிர்பார்ப்பது போல - நம்பிக்கை கொண்டிருப்பது போல - அவரது தரப்புக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்குமானால் அவரது கட்சி அல்லது தரப்பு அரசமைப்பது வேறு விடயம். அப்படி இல்லாமல் போகுமானால் - அதாவது அவரது கட்சி தனித்து அறுதிப் பெரும்பான்மையைபெறமுடியாமல் போனால் - என்ன நிலைமை என்று ஒரு கேள்வி எழுகின்றது.

சில சமயங்களில் எந்தத் தரப்புக்கும்தனித்துஅறுதிப்பெரும்பான்மை இல்லை என்ற நிலைமை வந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

எந்த தரப்புடனும் கூட்டு அரசு அமைக்கும் எண்ணம் இல்லை என்று இப்போதே திட்டவட்டமாக அறிவிக்கும் தமது நிலைப்பாட்டை ஆளும்தரப்பு தொடர்ந்து பேணுவது சாத்தியமாகாமல் போகலாம்.

எந்தத் தரப்புக்கும் பெரும்பான்மை இல்லாத ஒரு நிலைமை வந்தால் கூட்டு அரசு அமைக்க மாட்டோம் என்ற தேசிய மக்கள் கட்சியின் பிடிவாதம் தானாக கைவிடப்பட வேண்டிய விடயம் ஆகிவிடும்.

தேசிய மக்கள் சக்தி அதிக ஆசனங்களை இத்தப் பொதுத் தேர்தலில் பெறும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் இருந்தாலும், அது அறுதிப் பெரும்பான்மையை எட்டுமா என்ற கேள்வி இன்னமும் பலதரப்புகள் மத்தியிலும் நீடிக்கின்றது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

அந்தப் பின்புலத்தில், கூட்டரசு இல்லவே இல்லை என்று இப்போதே அறுதியிட்டுக் கூறுவதற்கு தேசிய மக்கள் சக்தி முயலுவது ஆரோக்கிய அரசியலாக இருக்க மாட்டாது.

# 2026 இல் மீண்டும் தி.மு.க. ஆட்சி; முதல்வர் மு.க. ஸ்டாலின் நம்பிக்கை




2026 ஆம் சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. மீண்டும் வெற்றி ஆட்சியமைக்கும் என்று கோவையில் முதல்வர் ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கோவைக்கு சென்றார். கோவை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்டு பேசினார். அதைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“மக்கள் பல கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். அதனை நிறைவேற்றுவோம் என உறுதி அளித்துள்ளோம்.

கோவை சுற்றுப் பயணத்தில் எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு மிகச் சிறப்பாக இருந்தது. 2026 ஆம் சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக மீண்டும் வெற்றி ஆட்சியமைக்கும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் மக்களின் வரவேற்பு இருந்தது. மீண்டும் திமுகதான் ஆட்சிக்கு வரப்போகிறது என்பதை மக்கள் வரவேற்பின் மூலம் தெரிந்து கொண்டேன். தங்க நகை தொழில் பூங்கா அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்படும்.” – என்றார்.

# தெலுங்கு மக்கள் குறித்து சர்ச்சை பேச்சு: நடிகை கஸ்தூரி மீது வழக்குப் பதிவு



தெலுங்கு மக்கள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசிய நடிகை கஸ்தூரி மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

வன்கொடுமை தடுப்புச் சட்டம் போல் பிராமணர்களைப் பாதுகாக்க ஒரு புதிய சட்டம் இயற்ற வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி இந்து மக்கள் கட்சி சார்பில் சென்னையில் கடந்த 3 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் நடிகை கஸ்தூரி கலந்துகொண்டு, தெலுங்கு மொழி பேசுபவர்கள் குறித்து சொன்ன கருத்துகள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தின.

இந்நிலையில், தெலுங்கு மக்கள் குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேசிய நடிகை கஸ்தூரி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, அகில இந்திய தெலுங்கு சம்மேளனம் சார்பில் சென்னை பொலிஸ் ஆணையர் அலுவலகத்தில் நேற்று புகார் அளிக்கப்பட்டது.

அந்தப் புகாரில், ‘எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் பொது வெளியில் ஒட்டுமொத்த தெலுங்கு சமுதாயத்தில் உள்ள அனைத்து பெண்களையும் நடிகை கஸ்தூரி இழிவுபடுத்தி உள்ளார். எனவே, அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்’ என குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தப் புகாரின் அடிப்படையில், நடிகை கஸ்தூரி மீது, எழும்பூர் பொலிஸ் நிலையத்தில் 4 பிரிவுகளின் கீழ் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இதனிடையே, நடிகை கஸ்தூரி தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“கடந்த 2 நாள்களாக எனக்கு பல மிரட்டல்கள் வந்த வண்ணம் உள்ளன. அவை பிரச்சினையை மேலும் தீவிரமாக்கியுள்ளது. இருப்பினும் எனது மரியாதைக்குரிய தெலுங்கு சகோதரர் ஒருவர், தமிழ்நாடு மற்றும் அதை கடந்து வாழும் தெலுங்கு மக்களுக்கு நான் பேசிய வார்த்தைகள் குறித்து பொறுமையாக விளக்கினார்.

வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்த நாட்டின் உண்மையான பெருமை மிகு தேசியவாதி நான். சாதி மற்றும் பிராந்திய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட எனக்கு எப்போதும் தெலுங்கு மக்களுடன் சிறந்த தொடர்பு உண்டு. அது எனக்கு கிடைத்த பாக்கியமாக கருதுகிறேன். நாயக்கர்கள், கட்டபொம்மன் ஆகியோரின் புகழையும், தியாகராஜர் கீர்த்தனைகளையும் கேட்டு வளர்ந்தவர் நான். என்னுடைய தெலுங்கு சினிமா பயணத்தை மிகவும் மதிக்கிறேன். தெலுங்கு மக்கள் எனக்கு பெயர், புகழ், அன்பை வாரி வழங்கியுள்ளனர்.

நான் வெளிப்படுத்திய கருத்துகள் குறிப்பிட்ட சூழல் சார்ந்து சில நபர்கள் குறித்து பேசியவையே தவிர, பெரும்பான்மையான தெலுங்கு சமூகத்தை குறிவைத்து சொல்லப்பட்டவை அல்ல என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். குடும்பம் போன்ற எனது தெலுங்கு சமூகத்தை புண்படுத்துவதோ, காயப்படுத்துவதோ என்னுடைய நோக்கமல்ல. கவனக்குறைவாக அப்படி எதுவும் நடந்திருந்தால் அதற்கு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவரின் நலன் கருதி நவம்பர் 3 ஆம் திகதி தெலுங்கு மக்களை குறிப்பிட்டு நான் பேசிய கருத்துகளை திரும்ப பெறுகிறேன். அன்றைய என்னுடைய உரையில் இடம்பெற்ற முக்கியமான கருத்துகளை இந்த சர்ச்சை தேவையில்லாமல் திசை திருப்பியிருக்கிறது. தமிழ்நாட்டில் வாழும் தெலுங்கு சகோதரர்கள், தமிழ்நாடு பிராமணர்களின் கண்ணியமிகு போராட்டத்துக்கு துணை நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.




# அமெரிக்க அதிபர் தேர்தலில் விறுவிறுப்பான வாக்குப் பதிவு

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வாக்குப் பதிவு அந்த நாட்டின் 50 மாகாணங்களிலும் விறுவிறுப்பாக நடைபெற்றது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடன், குடியரசு கட்சி சார்பில் அப்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிட்டனர். இதில் ஜோ பைடன் வெற்றி பெற்று ஜனாதிபதியானார்.

இந்த சூழலில் அமெரிக்காவின் 50 மாகாணங்களிலும் நேற்று காலை 7 மணிக்கு (இலங்கை நேரப்படி மாலை 5.30 மணி) தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்றுவருகிறது. முன்னாள் ஜனாதிபதியும், குடியரசு கட்சி வேட்பாளருமான டொனால்ட் ட்ரம்ப் தனது மனைவி மெலனியாவுடன் ப்ளோரிடா மாகாணத்தில் தனது வாக்கை செலுத்தினார். முன்னாள் ஜனாதிபதி பாரக் ஒபாமா அனைவரும் சென்று வாக்களிக்குமாறு தனது எக்ஸ் பக்கத்தில் வலியுறுத்தியுள்ளார்.

50 மாகாணங்களிலும் அமெரிக்க மக்கள் நீண்ட வரிசைகளில் நின்று ஆர்வத்துடன் வாக்களித்து வருகின்றனர். சுமார் 95 சதவீத இடங்களில் வாக்குச்சீட்டு நடைமுறையிலும், மீதமுள்ள 5 சதவீத இடங்களில் மின்னணு முறையிலும் வாக்குப்பதிவு நடைபெறுகிறது. அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் முன்கூட்டியே வாக்களிக்கும் வசதி உள்ளது. இதன்படி வாக்குப்பதிவு நாளுக்கு முன்பே 8.2 கோடி பேர் வாக்களித்துவிட்டனர். அதாவது 40 சதவீதம் பேர் முன்கூட்டியே தங்கள் வாக்கை செலுத்திவிட்டனர். மீதமுள்ள வாக்காளர்கள் நேற்று வாக்களித்தனர்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் ‘எலக்டோரல் காலேஜ்” (வாக்காளர் குழு) நடைமுறை பின்பற்றப்படுகிறது. அந்த நாட்டில் மொத்தம் 50 மாகாணங்கள் உள்ளன. அந்தந்த மாகாணங்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப வாக்காளர் குழு உறுப்பினர்கள் இருப்பார்கள்.

சிறிய மாகாணங்களில் 1 முதல் பெரிய மாகாணமான கலிபோர்னியாவில் 55 வரை வாக்காளர்கள் குழு உறுப்பினர்கள் உள்ளனர். ஒட்டுமொத்தமாக 538 வாக்காளர்கள் குழு உறுப்பினர்கள் உள்ளனர். இதில் குறைந்தது 270 உறுப்பினர்களின் ஆதரவை பெறும் வேட்பாளர், ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியும். ஒரு மாகாணத்தில் குறிப்பிட்ட கட்சியின் வேட்பாளர் அதிக வாக்குகளை பெற்று வெற்றி பெற்றால், அந்த மாகாணத்தின் ‘எலக்டோரல் காலேஜ்” வாக்குகள் முழுவதும் வெற்றி வேட்பாளரை சென்றடையும்.

வாக்குப் பதிவு இரவு 7 மணிக்கு (இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 4.30 மணி) நிறைவடையும். இதைத் தொடர்ந்து மாகாணவாரியாக வாக்கு எண்ணிக்கை தொடங்கி இன்று முடிவுகள் தெரியவரக்கூடும். குறிப்பிட்ட மாகாணங்களில் ஜனநாயக கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸ், குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் இடையிலான வாக்கு சதவீதம் குறைவாக இருந்தால், முடிவுகள் வெளியாவதில் தாமதம் ஏற்படக்கூடும்.













# காசா, லெபனானின் இஸ்ரேல் தாக்குதல்!

இஸ்ரேலிய பாதுகாப்பு தரப்பினர் காசாவின் பல்வேறு இடங்களில் வைத்தியசாலைகள் மற்றும் கூடாரங்கள் மீது தாக்குதல்களை நடத்தி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவின் டெய்ர் எல் பலாஹ் பகுதியில் கூடாரம் ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்டத் தாக்குதலில் குறைந்தது 6 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.

காசாவின் வடக்கில் உள்ள கமால் அட்வான் வைத்திய சாலையின் மீது இரண்டாவது நாளாகவும் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

இதில் மருத்துவ அதிகாரிகள் உள்ளிட்ட பலர் காயமடைந்துள் ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் 16 பேர் கொல்லப்பட்டதுடன், சுமார் 90 பேர் காயமடைந்துள்ளனர்.

லெபனானின் டைரே மற்றும் பின்ட் ஜேபில் மாவட்டங்க ளில் உள்ள கிராமங்களிலும் இஸ்ரேலிய படையினர் தாக் குதல்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி முதல் இஸ்ரேல் காசாவில் நடத்திய தாக்குதல்களால் 43,374 பாலஸ்தீனியர் கள் கொல்லப்பட்டதுடன், ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

அதேநேரம் லெபானில் நடத்தப்பட்ட தாக்குதல்களால் 3,002 பேர் கொல்லப்பட்டதுடன், 13,000 இற்கும் அதிக மானவர்கள் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகி றது.





# கிழக்கு மாகாணத்தில் ஐந்து அதிகார சபைகளின் புதிய தலைவர்களுக்கு நியமனம் வழங்கி வைப்பு

(கனகராசா சரவணன்)

கிழக்கு மாகாண வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, சுற்றுலா பணியகம், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, சாலை மற்றும் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை, முன்பள்ளி கல்வி பணியகம் ஆகிய 5 அதிகார சபைகளுக் கன தலைவர்களை நியமித்து அவர்களுக்கான நியமனக் கடிதங்களை கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர நேற்று செவ்வாய்க்கிழமை திருகோண மலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்திக் வைத்து வழங்கி வைத்தார்.

மாகாண அதிகார சபைக்களுக்கான தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களை நியமித்து அவர்களுக் கான நியமனக்கடிதங்களை வழங்கிவைக்கும் நிகழ்வு திருகோணமலை ஆளுநர் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதில் அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர, கலந்துகொண்டு அவர்களுக்கான நியமனக்கடிதங்களை வழங்கிவைத்தார்

இதன்போது நிறுவனங்களின் புதிய தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவித்த ஆளுநர், சுதந்தி ரமாக செயற்படுவதற்கான அனைத்து அதிகாரங்களும் வழங்கப்படும் என்றும் அரசியல் தலையீடுகள் இன்றி தமது சேவைகளை ஆற்றக்கூடிய சூழலை உருவாக்குவதாகவும் தெரிவித்தார்.

இதில் மாகாண வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தலைவராக ஜி.சுகுமாறன், மாகாண சுற்றுலா பணியக தலைவராக எம்.ஜி.பிரியந்த மலவனகே, மாகாண கூட்டு றவு ஊழியர் ஆணைக்குழு தலைவராக திருமதி.ரஜினி கணேசபிள்ளை, மாகாண சாலை மற்றும் பயணிகள் போக்கு வரத்து அதிகாரசபை தலைவராக கித்சிறி நவரத்ன, மாகாண முன்பள்ளி கல்வி பணியக தலைவராக அ.விஜயானந்தமூர்த்தி ஆகியோர் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான நியமன கடிதங் களை ஆளுநர் வழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க ஆகியோர் கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது














# ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள அனலைதீவு மீனவர்கள் இருவரையும் விடுவிக்கக் கோரி யாழ். ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்து.

கடந்த 10ஃ06ஃ2024 திகதியன்று யாழ். அனலைதீவு கடற்பரப்பில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள், கடல் சீற்றம் காரணமாக தமிழகம் ஆர்காட்டுத் துறையில் கரையொதுங்கி தற்போது திருச்சி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி இரண்டு மீனவர்களையும் விடுவிக்கக் கோரி ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் முன்பாக அனலை தீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அனலைதீவு மீனவர்கள் இணைந்து நேற்று செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அனலைதீவைச் சேர்ந்த நாகலிங்கம் விஜயகுமார், திருச்செல்வம் மைக்கல் பெர்னாண்டோ ஆகிய மீனவர்களே திருச்சி முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய போராட்டத்தின் இறுதியில் போராட்டக்காரர்களால் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளர் மஞ்சுளாதேவி சதீசனிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.













# பிரதேச செயலர்களுடன் கிழக்கு ஆளுநர் சந்திப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் திருகோணமலை மாவட்ட பிரதேச செயலகங்களின் செயலாளர்களுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க மற்றும் திருகோணமலை மேலதிக மாவட்ட செயலாளர் எஸ்.சுதாகரன் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

கடந்த காலங்களில் மாகாண அரச சேவையும், மத்திய அரச சேவையும் தனித்தனியாகவே செயற்பட்டன எனவும், அவ்வாறு செயற்படாமல் ஒன்றிணைந்து அரச சேவையை வழங்குமாறும் பிரதேச செயலாளர்களிடம் ஆளுநர் தெரிவித்தார். கடந்த காலங்களில் அரசியல் தலையீடுகளினால் இக்கட்டான சூழல் ஏற்பட்ட போதும் இனிமேல் அரசியல் தலையீடுகள் இன்றி கடமைகளை மேற்கொள்ளக்கூடிய சூழலை உருவாக்குவேன் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு பிரதேச செயலகமும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் செயலாளர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன், அங்கு காணி, காட்டு யானைகளினால் சேதம், பாடசாலை இடைவிலகும் சிறுவர்கள், நிறுவனங்களில் உள்ள ஊழியர் வெற்றிடங்கள் போன்ற பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்தும் பிரதேச செயலாளர்களால் தெரிவிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

சில அதிகாரிகளினால் சட்ட விரோத செயல்கள் நடப்பதாக பொதுமக்கள் புகார் கூறுவதுடன், செயலாளர்களையும் தொடர்பு கொண்டு, இனிமேல் பொது மக்களுக்கு இடையூறு, பாதகமான செயற்பாடுகள் நடைபெறாமல் இருக்க ஏற்பாடு செய்யுமாறும் ஆளுநர் கூறினார்.

# யாழ் கலாசார நிலையப் பயன்பாடு; துணைத் தூதர், ஆளுநர் ஆராய்வு





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தைப் பராமரித்தல் மற்றும் அதனைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துதல் தொடர்பாக இந்தியத் துணைத் தூதுவர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் இடையே விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனின் அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் இந்தியத் துணைத்தூதர் சாயி முரளி கலந்துகொண்டார்.

இந்திய அரசின் நிதி உதவியுடன் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தைப் பராமரித்தல் மற்றும் கலாசார நிகழ்வுகளை முன்னெடுத்தல் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது கலை, கலாசார, நிகழ்வுகளை நடத்துதல், உரியவாறு ஒழுங்கமைத்தல் தொடர்பிலும், சமூகத்தின் பாவனைக்கு விடுதல் மற்றும் கலாச்சார மத்திய நிலையத்தைத் தொடர்து இயங்குநிலையில் வைத்திருத்தல் தொடர்பிலும் உரையாடப்பட்டது. கலாசார மத்திய நிலையத்தை மாநகர சபையிடம் ஒப்படைத்தல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இச் சந்திப்பில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், ஆளுநரின் பதில் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர், யாழ் மாநகர சபை ஆணையாளர், கலைத்துறை சார்ந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# அப்பன் முருகன் அருட்டமிழ் ஆகும்!

**( கந்தசஷ்டி 5 ஆம் நாள் )**

மொழியும் ஒளியும் முருகன் என்பார்
முத்தமிழ் உயிராய் முருகனே உள்ளான்
முருகன் பெயரே இனிமைத் தமிழே
தமிழே முருகன் தலை பணிவோமே

அன்னைத் தமிழில் அமுதாய் இருக்கும்
அருமைத் தமிழே திருப்புகள் ஆகும்
அருண கிரியின் அத்தனை தமிழும்
அப்பன் முருகன் அருட்டமிழ் ஆகும்

திருப்புகள் தமிழைச் சிந்தை இருத்தினால்
செந்தமிழ் அனைத்தும் வந்துமே குவியும்
பாடிடும் வேளை பக்தியும் பெருகும்
பரமனின் மைந்தன் சித்தியும் கிடைக்கும்!

*மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,*
*மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,*
*மெல்பேர்ன், அவுஸ்திரேலியா.*

# வலிந்து சென்று அரசுக்கு ஆதரவு வழங்கி அமைச்சுப் பதவி பெற தமிழரசு முயற்சி!

## சாடுகின்றார் சுரேன் குருசாமி




அநுரகுமார தலைமையிலான அரசிற்கு வலிந்து சென்று ஆதரவை வழங்கி அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்கு தமிழரசுக் கட்சி தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

– இவ்வாறு ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளரும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளருமான சுரேன் குருசாமி குற்றச்சாட்டியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே சுரேன் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

முக்கியமான ஒரு தேர்தலில் பல்வேறு கட்சிகள் சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுவது தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரிப்பதற்காகவே என்பது தெளிவாகின்றது.

இவ்வாறு போட்டியிடும் பல தரப்பினரும் தமிழ் மக்களின் நலனை முன்னிலைப்படுத்தி செயற்படுபவர்களாகத் தெரியவில்லை. தங்களுடைய பதவிகளைப் பெறுவதற்காகத்தான் என்பது தெளிவாகின்றது.

ஆகவே தமிழ் மக்கள் மிகவும் அவதானமாகச் சிந்தித்து, தமிழ்த் தேசியக் கொள்கையுடன் பயணிக்கின்ற – வடக்கு, கிழக்கு முழுவதும் ஒற்றுமையை வெளிப்படுத்தி நிற்கின்ற – ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்.

அது தான் தமிழ் மக்களின் பலமான பிரதிநிதித்துவத்தையும், எதிர்பார்க்கின்ற மாற்றத்தையும் ஏற்படுத்தும்.

தென்னிலங்கை நிகழ்ச்சி நிரலோடு தமிழ்த் தேசியம் பேசிக் கொண்டு அதன் போர்வையிலே பயணிக்கின்றவர்களை அடையாளம் கண்டு நிராகரிக்க வேண்டும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தென்னிலங்கை கட்சியோடு சேர்ந்து வாக்கு கேட்டவர்கள் இப்போது தமக்கு வாக்களிப்பதுதான் தமிழ் தேசியம் என்று சொல்லி மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் தெற்கில் ஆட்சியில் உள்ள அரசாங்கம் தங்களுடைய கட்சியினருக்கு மாத்திரம் அமைச்சுப் பதவிகளை வழங்குவோம் என்று கூறி வருகின்ற சூழலில் தமிழ் தரப்பிலே தேசியம் பேசிக் கொண்டிருக்கும் கட்சிகள் தாங்கள் அமைச்சு பதவிகளை பெறுவது தொடர்பில் பரிசீலிப்போம், சேர்ந்து பயணிக்க தயாராக இருக்கிறோம் என கூறுகின்றனர்.

அதுவும் வேண்டாம் என்று கூறுகின்ற அரசாங்கத்திடம் வலிந்து சென்று ஒரு பிச்சை கேட்பது போல அமைச்சுப் பதவிக்காகத் தங்களுடைய பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆகவே தமிழ் மக்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். அதாவது சுயேச்சைகள் மாத்திரமல்ல, தேசியம் பேசுகிறவர்களும் தெற்கில் ஆட்சி அமிகாரத்தில் இருக்க கூடியவர்கள் பதவி கொடுக்கா விட்டாலும் முழங்காலில் நின்று கூட இந்தப் பதவிகளைப் பரிசீலிக்கிறோம், எதிர்பார்க்கிறோம், ஒன்றிணைந்து செயற்படுவோம் என்று கூறுகின்றனர்.

தங்கள் பதவிகளுக்காக தேசியம் பேசி ஏமாற்றுபவர்களை நிராகரித்து, ஒற்றுமையாக ஒரே கூட்டணியாக போட்டியிடும் எமது கூட்டணியை ஆதரித்து, பலப்படுத்துங்கள். – என்றார்.

# நிறுத்தப்பட்டிருந்த வாகனம் நகர்ந்து கவிழ்ந்து விபத்து!

## நோர்வூட் பகுதியில் சம்பவம்



“ஹாண்ட் பிரேக்” போடாமல் சாரதி கவனக் குறைவாக சிறிய ரக பார ஊர்தியை நிறுத்தி வைத்திருந்ததில் அந்த வாகனம் ஒன்று மதகில் பாய்ந்து புரண்டு விபத்துக்குள்ளானது. வாகனத்தில் இருந்த கர்ப்பிணித்தாய் ஒருவர் பாதிப்புற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா நோர்வூட் பிரதான பாதையில் வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

சாரதி தனது மனைவியை வாகனத்தில் இருத்திவிட்டுச் சென்ற வேளையில் வாகனம் தன்பாட்டில் நகர்ந்து விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சம்பவத்தில் சிறிய காயங்கள் மற்றும் அதிர்ச்சி காரணமாகவே கர்ப்பிணித் தாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒரு லட்சம் ஹெக்டேயரில் சோளம் பயிரிடத் திட்டம்

ஒரு லட்சம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் சோளத்தை பயிரிட திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்தஆண்டில்80,000 ஹெக்டேயர் நிலப்பரப்பில் சோளம் பயிரிடப்பட்டதாக அமைச்சின் செயலாளர் என்.பி.என்.எம்.விக்ரம சிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டில் மொனராகலை மாவட்டத்திலேயே அதிகளவிலான சோளம் பயிரிடப்படுகிறது.

நாட்டின் நுகர்விற்கு போதுமான அளவு சோளம் உற்பத்தி செய்யப்படாமையால் 3 லட்சம் மெட்ரிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் இதுவரை நாட்டிற்கு 150,000 மெட்ரிக் தொன் சோளம் மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

எஞ்சிய தொகை சோளத்தை டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் இறக்குமதி செய்யுமாறு விவசாய அமைச்சினால் இறக்குமதியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.





# போலியாக 5,000 ரூபா நாணயத்தாளை இணையத்தில் வெளியிட்டவர் கைது

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் புகைப்படத்தைப் பயன்படுத்தி போலியான முறையில் உருவாக்கப்பட்ட 5,000 ரூபா நாணயத்தாளை இணையத்தில் வெளியிட்டமை தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலையில் நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வட்டரெக்கவைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.



# வாக்காளர் அட்டைகள் 70 வீதம் விநியோகம்

இதுவரை 70 வீத உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும் என பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நாளை வரை வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் அவற்றை விநியோகிக்கும் தபால் நிலையத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு; யோசனை அமைச்சரவையின் முன்னால்



முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பான யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

மேற்படி யோசனை தொடர்பில் அமைச்சரவை வழங்கும் தீர்மானத்தின் பின்னர் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை குறைப்பதா, இல்லையா என்பது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படுமென பதில் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவைப் பத்திரமொன்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

# நெல் மற்றும் அரிசி கையிருப்பு அறிக்கை இன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும்

நெல் கையிருப்பு மற்றும் அரிசி கையிருப்பு தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் இன்று கையளிக்கப்படவுள்ளது.

4 மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகள் தொடர்பான தகவல்கள் வர்த்தக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்தார்.



எவ்வாறாயினும், ஏனைய 10 மாவட்டங்களில் உள்ள அரிசி ஆலை உரிமையாளர்களிடம் காணப்படும் நெல் கையிருப்பு மற்றும் அரிசி கையிருப்பு தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அவர் குறிப்பிட்டார்.

அடையாளம் காணப்பட்ட ஏனைய மாவட்டங்களிலுள்ள நெல் மற்றும் அரிசி கையிருப்பு தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை வழங்குமாறு அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக இந்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது.

# ஹேமசிறி, பூஜித்தை விடுவித்த தீர்ப்பை வலுவற்றதாக்கி உயர் நீதிமன்றம் உத்தரவு



முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோரை விடுவித்து கொழும்பு விசேட மூவரடங்கிய மேல்நீதிமன்றம் வழங்கிய உத்தரவை உயர் நீதிமன்றம் நேற்று வலுவற்றதாக்கியுள்ளது.

புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறிய மையின் ஊடாக குற்றவியல் குற்றச் சாட்டுகளின் கீழான குற்றங்களை இழைத் துள்ளதாக குற்றஞ்சுமத்தி சட்டமா அதிபர் தாக்கல் செய்திருந்த வழக்கில் கொழும்பு விசேட மூவரடங்கிய மேல்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவே இவ்வாறு வலுவற்ற தாக்கப்பட்டுள்ளது.

சட்ட மாஅதிபரால் பிரதிவாதிகளுக்கு எதிராக தனித்தனியாக தாக்கல் செய்யப்பட்டிருந்த 2 வழக்குகளை விசாரித்த ஆதித்ய பட்டபெந்திகே, நாமல் பண்டார பலல்லே, மொஹொமட் இசர்டீன் ஆகிய மேல்நீதிமன்ற விசேட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம், 2022 பெப்ரவரி 18 ஆம் திகதி பிரதிவாதிகளை விடுவித்து வழங்கிய தீர்ப்பை சவாலுக்குட்படுத்தி சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான இறுதி தீர்ப்பை வழங்கி உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையை மீள ஆரம்பித்து பிரதிவாதிகள் தரப்பு விளக்கத்தை கோருமாறும் நீதியரசர்கள் குழாம் மேல்நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

வழக்கு விசாரணைகளின்போது மேல்நீதிமன்றம் பிரதிவாதிகள் தரப்பிடம் விளக்கம் கோரியிருக்க வேண்டும் என தீர்ப்பை அறிவித்த நீதியரசர்கள் குழாம் தெரிவித்துள்ளது.

அவ்வாறு செய்யாமல் பிரதிவாதிகளை விடுவிப்பது சட்டத்திற்கு முரணான உத்தரவு என தீர்மானித்து உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

# பொதுத் தேர்தல் தொடர்பில் 1642 முறைப்பாடுகள் பதிவு




பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பில் இதுவரை 1642 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பாக 1592 முறைப்பாடுகளும், வன்முறைகள் தொடர்பில் 15 முறைப்பாடுகளும், ஏனைய தேர்தல் குற்றங்களின் அடிப்படையில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதேநேரம் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் 1365 முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ள அதேநேரம், 277 முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# சகல தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளும் இன்று கொழும்புக்கு அழைக்கப்பட்டனர்




மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் இன்று கொழும்புக்கு அழைக்கப் பட்டுள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பிலான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசிக்கும் வகையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் செயலகத்தில் இன்று இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் அனைவரும் பங்கேற்க வேண்டுமென அறிவுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.



# பெரும்போகத்திற்காக உர நிவாரண வழங்கல் செயற்பாடு ஆரம்பமானது

இந்த முறை பெரும்போகத்திற்காக உர நிவாரண வழங்கல் செயற்பாடு ஆரம்பமாகியுள்ளது.

கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் யூ.பி. ரோஹன ராஜபக் ஷ இதனைத் தெரிவித்துள்ளார்.

உர நிவாரணமாக விவசாயிகளுக்கு 25,000 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் 15,000 ரூபா என்ற முதற்கட்ட நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருவதாக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் யூ.பி. ரோஹன ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.




# கராப்பிட்டிய வைத்தியசாலையின் வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு

கராப்பிட்டிய வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று காலை 8 மணி முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

காலி கராபிட்டிய தேசிய வைத்தியசாலையின் வைத்தியர் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைக்குத் தீர்வை வழங்காத சுகாதார அதிகாரிகளுக்கு எதிராக வைத்தியர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியரின் நடவடிக்கையினால் சில வைத்தியர்கள் வைத்தியசாலையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இணைச் செயலாளர் வைத்தியர் அசங்க கோனார தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.11.2024




இன்று உங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்த வேண்டும். சவாலான சூழ்நிலைகள் காரணமாக இன்று சமநிலை இழக்க நேரலாம். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திறமையுடன் கவனமாக பணியாற்ற சில விஷயங்களை விட்டுக் கொடுக்க வேண்டும்.

பணியில் காணப்படும் பதட்டம் காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இத்தைகய சூழ்நிலைகளை தவிர்த்தல் நல்லது. சகஜமான அணுகுமுறையால் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கலாம்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலைகளை உண்டாக்கும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. விரும்பியது கிடைக்கும் சூழ்நிலை காணப்படவில்லை. வளைந்து கொடுத்து போவதன் மூலம் நற்பலன்களைக் காணலாம்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படும். உங்கள் பணிகளை ஒழுங்குமுறையாக திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

உங்களின் குழப்பமான மன நிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் வேண்டும்.

நிதி வளர்ச்சி திருப்திகரமாக காணப்படவில்லை. பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது.

இன்று ஆரோக்கியம் குன்றி காணப்படும். தலைவலி அல்லது முதுகுவலி ஏற்படலாம்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் நாள். இலக்குகளை அடைவதற்கான தன்னம்பிக்கை உங்களிடம் நிறைந்து காணப்படும். இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் பணியில் உங்கள் தனித்திறமையை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் செயல் திறனில் இது பிரதிபலிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். எதிர்பாராத பண வரவுகள் காணப்படும்.

ஆரோக்கியக் குறைபாடு ஏதும் இருக்காது. முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




பொறுமை மற்றும் உறுதியை வளர்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் அணுகுமுறையில் வேகம் கூடாது. உங்கள் செயல்களை திட்டமிடுவதன் மூலம் வெற்றி காணலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. அதனால் நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

உங்களின் எதிர்மறை உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எனவே இதனை தவிர்த்தல் நலம்.

பணப்புழக்கம் சீராக இருக்காது. தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். இன்று உங்கள் ஆற்றல் குறைந்து காணப்படும். தலைவலிக்கான வாய்ப்பு உள்ளது. இன்று ஓய்வாக இருப்பது நல்லது.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். கூடுதல் பொறுப்புகளுக்கு நேரம் செலவழிக்க நேரும். மனதில் குழப்பங்கள் காணப்படும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். நன்மையான பலன்கள் கிடைக்க திட்டமிடுதல் நல்லது.

உங்கள் துணையுடன் கவனமாக உரையாட வேண்டும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொண்டால் உறவுப் பிணைப்பு வலுப்படும். உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

கண் எரிச்சல் ஏற்படலாம். கண்களை வருத்திக் கொள்ளாமல் இருப்பது நல்லது. உற்சாகமான மன நிலையை பராமரிக்க வேண்டும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. தீய விளைவுகள் ஏற்படாமல் இருக்க ஆழ்ந்து யோசித்து செயல்பட வேண்டும். பிறருடன் பேசும் போது வார்த்தைகளை கவனமாக பிரயோகிக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற முடியாதபடி ஏமாற்றங்களும் தடைகளும் காணப்படும். உங்கள் சக பணியாளர்களுடனான தகவல் பரிமாற்றம் திருப்திகரமாக இருக்காது.

உங்கள் துணையுடன் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இன்றைய நாளை அமைதியாக கழிக்க இதனை தவிர்த்தல் வேண்டும். உங்கள் பிரியமானவருடன் உங்கள் அணுகுமுறையை மாற்றிப் பழகுங்கள்.

தேவையற்ற செலவினங்கள் இன்று காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுப்படுத்தி சிக்கனமாக இருப்பது நல்லது.




இன்று உங்கள் முயற்சிகளில் நல்ல பலன்கள் கிடைக்கும். நீங்கள் வெற்றி பெறுவதற்கான உறுதியுடன் காணப்படுவீர்கள். உங்களின் நம்பிக்கை உணர்வு உங்களை உச்சத்திற்கு அழைத்துச் செல்லும்.

பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நெருக்கம் காணப்படும். உங்களின் பரஸ்பர பேச்சில் அது வெளிப்படும். இருவரும் நல்லுறவு கொண்டு மகிழ்வீர்கள்.

நிதிநிலையைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்டமான நாள். உங்கள் கையில் இருக்கும் உபரி பணத்தைக் கொண்டு நீங்கள் நீண்ட கால திட்டம் ஒன்றை தீட்டலாம்.

மனதில் இருக்கும் திருப்தி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அனுபவித்து மகிழும் நாள். உங்கள்குழந்தைகளைப்பற்றிபெருமைப் படுவீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன் தரும்.

புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணியாற்றுவதை எளிதாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

நிதி வளர்ச்சி மகிழ்ச்சிகரமாக இருக்கும். புதிய முதலீடு முயற்சிக்கு இன்றைய நாளை நீங்கள் நன்கு பயன் படுத்திக் கொள்ளலாம்.

இன்று ஆற்றலுடன் காணப்படுவீர்கள். எனவே உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.11.2024

## தனுசு

எதிர்பாராத நிச்சயமற்ற பலன்கள் காணப்படும். நன்மை மற்றும் தீமை இரண்டும் கலந்த பலன்கள் காணப்படும். சவால்களை சந்திக்க பொறுமை தேவை.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். திறமையுடன் செயலாற்ற மிகுந்த கவனம் தேவை.

உங்கள் துணையுடன் பேசும் போது களிப்பான மனநிலையில் எற்றுக் கொள்ள வேண்டும். அவரின் வார்த்தைகளை உன்னிப்பாக கேட்பதன் மூலம் உறவில் பிரச்சினைகளை தீர்க்கும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். எதிர்கால பாதுகாப்பு கருதி பணத்தை சேமிக்க வேண்டும்.

ஆரோக்கியமாய் இருக்க சத்தான உணவை உட்கொள்ளவேண்டும். இன்று அமைதியின்மையும் சோர்வும் காணப்படும்.

## கும்பம்

உங்கள் இலக்குகளை அடைவதற்கு சிறந்த நாள். எளிதாக உங்கள் இலக்குகளை அடைவீர்கள். அடிக்கடி பயணம் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கலாம்.

உங்கள் பணியில் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் இருவரிடம் காணப்படும் பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையிடம் உங்கள் கருத்துக்களை மனம் திறந்து கூறுவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களின் கடின உழைப்பிற்கு கூடுதல் பணம் ஊக்கத்தொகையாக கிடைக்கும்.

இன்று சுறுசுறுப்புடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். இதனால் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.

## மகரம்

இன்று அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் வெற்றி காணலாம். அமைதியாக இருக்கவேண்டும். தியானம் மேற்கொள்ள வேண்டும்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். அதிக பணிகள் காரணமாக சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். நீங்கள் சற்று சோர்வடைவீர்கள்.

உங்களிடம் காணப்படும் அகந்தை காரணமாக உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் சாதகமாக இருக்காது. தொலை தூர நிலுவைப் பணம் கிடைப்பதற்கு தாமதங்கள் ஏற்படும்.

## மீனம்

இன்றைய நாள் சுறுசுறுப்பாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். உங்கள் முயற்சியில் வெற்றிகளை எளிதாக அடையலாம். இதனால் உற்சாகமும் மகிழ்ச்சியும் காணப்படும்.

சக பணியாளர்கள் ஆதரவாகாவும் உதவிகரமாகவும் இருப்பார்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் விதமாக உங்கள் செயற்றிறன் காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள். இந்த அணுகுமுறை காரணமாக இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் பராமரிக்க முடியும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உபரி பணத்தை நல்ல விஷயங்களுக்கு பயன்படுத்தலாம்.

இன்று நலமாய் உணர்வீர்கள்.




